Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

தனிப்பிரதி
ரூ.10/-

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மலர் - 36 இதழ் - 1 ஜனவரி - 2023



# காங்கேயம் சபையில் புத்தாண்டு நாளில் கர்த்தருக்கு

# ஒப்புக்கொடுத்த இளம் பிள்ளைகள்



## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| 1. ஆசிரியர் உரை | 3 |
| 2. கிறிஸ்தவர்களாக... | 11 |
| 3. பெண்கள் பகுதி | 14 |
| 4. வாலிபர் பகுதி | 18 |
| 5. சிறுவர் பகுதி | 21 |
| 6. சேர்ந்திருந்தால்... | 23 |
| 7. புதிய நாமம் | 26 |
| 8. புத்தாண்டில் சில... | 29 |
| 9. மெய்யான சபை | 32 |


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 36 JAN - 2023 Issue - 1

ஆசிரியர் உரை

## ...அறிவதே நித்திய ஜீவன்

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றையும், அவருடைய பாடுகளையும் நமக்கு வெளிப்படுத்தும் நான்கு நற்செய்தி நூல்களில், யோவான் சுவிசேஷம் சற்று வித்தியாசமானது. முதல் மூன்று நற்செய்தி நூல்களுக்குமான ஓர் இணைப்பு நூலாக இது உள்ளது. இயேசு வானவரின் ஏழு அற்புதங்களையும், ஏழு **நானே**க்களையும் மொத்தத்தில் சுற்றி வரும் இந்நூல், புரிந்து கொள்வதற்கு மிகவும் எளிமையானது. அதே நேரத்தில், கருத்தினடிப் படையில் மிகவும் ஆழமானது. இதன் ஆசிரியரான யோவான் நற்செய்தியாளரின் நோக்கம் மிகத் தெளிவானது. இந்நூலை வாசிப்பவர்கள் இயேசுவானவரின் தெய்வீகத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டு, அதனடிப்படையில் அவர் ஊழியத்தின் மீது முழு நம்பிக்கை கொண்டு, அவரில் விசுவாசம் வைப்பதோடு அவருடைய நாமத்தினாலே ஒவ்வொருவரும் நித்திய ஜீவனை அடைய வேண்டுமென்ற நோக்கோடு எழுதியுள்ளார். [யோவா 20:30,31].

இப்படி எல்லாரும் நித்திய ஜீவனை அடைய வேண்டு மென்பதை நோக்கமாகக் கொண்டிருக்கும் இந்த யோவான் நற்செய்தியாளர், வெறுமனே நித்திய ஜீவன், நித்திய ஜீவன் என்று மாத்திரம் பேசிக்கொண்டிராமல், எது நித்திய ஜீவன் என்றும், அதை எப்படிப் பெற்றுக் கொள்வதென்றும் அழகாக தொகுத்துக் கொடுத்துள்ளார். அதைத்தான் நாம் யோவான் 17:3–ல் பார்க்கிறோம். **ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்** என்று. இங்கே, சொல்லப்பட்டிருக்கும்

நித்திய ஜீவன் பற்றி நாம் நமது ஆராய்ச்சியில் இறங்குவதற்கு முன்பாக இதன் பின்னணி பற்றி கொஞ்சம் பார்த்து விடுவோம்.

யோவான் 17 ஆம் அதிகாரம், ஒட்டுமொத்த வேதாகமத்திலுள்ள மிகச் சிறந்த அதிகாரங்களுள் ஒன்று. இதிலுள்ள ஜெபத்தை ஏறெடுப்பதற்கு முன்பாக, இயேசுவானவர் ஒரு மேல் வீட்டில் தனக்கு நெருக்கமான சீடர்களோடு சேர்ந்து பஸ்கா பண்டிகையைக் கடைபிடித்து அவர்களோடு உரையாடியதோடு கர்த்தருடைய பந்தியையும் அங்கு ஏற்படுத்தினார். இப்படிப் பல முக்கிய நிகழ்வுகள் அங்கு நடந்துள்ளபடியால் அந்த மேல்வீட்டை ஓர் ஆசீர்வதிக்கப்பட்ட வீடு என்று சொன்னாலும் தவறில்லை, அப்படித்தானே. அந்த உரையாடலை முடித்து அவர்களை விட்டுப் பிரியும் நேரம் வந்து விட்டது. அவருடைய மனக் கண்களுக்கு முன்பாக, சிலுவைப்பாடுகள் அப்படியே பய முறுத்திக் காட்சி தந்தது. ஆம், சிலுவையின் நிழல் அவர் மீது அப்போது படிந்திருந்தது. எதிர்கொள்ள வேண்டிய சோதனை, பட வேண்டிய வேதனைகள் எல்லாம் கண் முன் நின்றது.

அப்படி விடை பெறுவதற்கு முன்பு, ஜெபவீரராகிய நம் இயேசு ஆண்டவர் மிக முக்கியமான இச்சமயத்தில், ஒரு ஜெபம் இல்லாமல் அவர்களை அனுப்ப விரும்பவில்லை. ஆம், அவர்களோடு சேர்ந்து அங்கே ஜெபித்தார். ஒரு ஜெபம் எப்படியிருக்க வேண்டுமென்பதற்கு, இந்த ஜெபத்தின் மூலம் அவர் இலக்கணம் வகுத்துக் கொடுத்துள்ளார். எளிமையான மொழிநடை, ஆழமான பொருள், ஊக்கமான வேண்டுதல் என்பன இதன் சிறப்பு. இந்த ஜெபத்தில் தான் 'நித்தியஜீவன்' பற்றிய ஓர் அருமையான விளக்கத்தையும் வெளிப்படுத்தி உள்ளார்.

இந்த நித்திய ஜீவன் பற்றி வேத வசனங்கள் என்ன சொல்லுகிறது என்று பார்ப்போம். யோவான் அப்போஸ்தலன், தனது நற்செய்தி நூலில் **என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பின வரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு** என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார். [யோவா 5:24] இன்னும் 1யோ 5:11 ம் வசனம் தேவன் நமக்கு **நித்திய ஜீவனைத்தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்த சாட்சியாம்** என்றும் கூறியுள்ளார். ஆக இவ்வசனங்கள், நித்திய ஜீவனானது இப்பூமியில், **ஆவிக்குரிய வாழ்வு ஆரம்பம் ஆகும்போது தொடங்கி விடுகிறது** எனத் தெளிவாகக் கூறுகிறது.

அதே நேரத்தில், வேறு பல வசனங்கள், தேவனுக்கு ஊழியம் செய்வதால் கிடைக்கும் **முடிவான பலன் நித்திய ஜீவன்** என்று கூறுகிறது. உதாரணமாக, மத்தேயு 25:46 அந்தப்படி இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், **நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும்** போவார்கள் என்றார். இன்னும் மாற்கு 10:30, 'இப்பொழுது இம்மையிலே, துன்பங்களோடே கூட நூறத்தனையாக, வீடுகளையும், சகோதரரையும், சகோதரி களையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே **நித்திய ஜீவனையும்** அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றுள்ளது.

ஆக, நித்திய ஜீவன் பற்றிக் கூறும் இந்த வசனப்பகுதிகளையும் நாம் கவனிக்கும் போது, நித்திய ஜீவன் என்பது, அநேகராகிய நாம் நினைப்பது போல, வாழும் கால அளவைக் குறிக்கக்கூடிய ஒன்றாக இல்லாமல், **ஆவிக்குரிய ரீதியில் ஒருவன் வாழும் வாழ்க்கையின் தன்மையைக் குறிக்கக்கூடியதாக இருக்கிறது.** ஒருவனின் ஆவிக்குரிய வாழ்க்கையை நாம் கவனித்துப் பார்த்து அதனடிப்படையில், ஒருவனுக்குள் நித்திய ஜீவன் உண்டா இல்லையா என்பதை நாம் தீர்மானித்து விட முடியும். எப்படியெனில், இதே யோவான் ஆசிரியர் கூறும்போது, தன் சகோதரனைப் **பகைக்கிறவ னிடத்தில் நித்திய ஜீவன் இல்லையென்றும், தன்** சகோதர னிடத்தில் **அன்பு கூருகிறவனிடம், நித்திய ஜீவன் உண் டென்றும்** தெளிவுபடக் கூறுகிறார் [1 யோவா 3:14, 15].

இப்படி இம்மையின் வாழ்க்கையிலும், மறுமையின் வாழ்க்கையிலும் கிடைக்கக் கூடிய, நித்திய ஜீவன் பற்றி வேதாகமம், ஈவு என்றும், **முற்றிலும் இலவசமானது** என்றும் கூறுகிறது. 'நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன் என்றும், அவைகள் ஒருக்காலும் கெட்டுப் போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை என்று நம்முடைய இரட்சகர் கூறியுள்ளார் [யோவா 10:28] மேலும், ரோமர் 6:23 ல் **பாவத்தின் சம்பளம் மரணம் என்றும், தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டாகும் நித்திய ஜீவன்** என்றும் தேவன் பவுலைக் கொண்டு கூறியுள்ளார். நாம் வாழும் இந்தப் பூமியில் எதுவுமே இலவசம் இல்லை என்ற நிலை இருக்கும் போது, நம்முடைய தேவன் எவ்வளவு பெரிய பாக்கியத்தை இலவசமாகக் கொடுத் திருக்கிறார் என்று எண்ணிப் பாருங்கள்.

இப்பொழுது கேள்வியென்னவெனில், தேவனாலே இலவசமாகக் கொடுக்கப்பட்டு, நித்திய காலம் வரைக்கும் நிலை நிற்கும் நித்திய ஜீவன், எங்கே இருக்கிறது என்பது. தேவன், நித்திய ஜீவனை, பெரும் பணத்தோடும், பொரு ளோடும், பதவியோடும், பட்டத்தோடும், வேறு பல உலக செல் வாக்கோடும் இணைத்து வைக்காமல், அவருடைய வல்லமை மிக்க **ஜீவனுள்ள வார்த்தைகளோடே** இணைத்து வைத்து ள்ளார். இவ்வுண்மையைக் கீழ்க்கண்ட வசனங்கள் உறுதிப் படுத்துகிறது. வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். அவைகளால் உங்களுக்கு **நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே....** (யோவ 5:39) என்று.

சரி, இங்கே பிதாவையும், குமாரனையும் **அறிவது** என்றால் என்ன? சாதாரணமாகப் பார்த்தால், அறிவது என்பது ஒரு சராசரி வார்த்தையாகவே தெரிகிறது. நாமெல்லாரும், நான் அவரை அறிவேன், இவரை அறிவேன் என்றும், அவரைத் தெரியும், இவரைத் தெரியும் என்றும், சரியாகத் தெரியாதவர்கள் பற்றிக்கூட கூறுகிறோமே அப்படியா? அதுவா இதற்குப் பொருள். பிதாவையும், அவருடைய குமாரனையும் நாம் இந்த அளவில் அறிந்தால் போதுமென்றா வேத வசனம் கூறுகிறது? நித்திய ஜீவனுக்கு இப்படி பட்டும், படாமலும் அறிந்து கொள்வது போதுமானால், நியாயத்தீர்ப்புக்கே அவசியமிருக்காது தானே. ஏனெனில், உலகில் இருக்கும் எல்லோரும் கிறிஸ்துவுக்கு (கி.மு) என்றும், கிறிஸ்துவுக்குப் பின் (கி.பி) என்றும் சொல்லும் போது அவரை ஒரு வகையில் அறிந்து விடுகிறார்கள் தானே! இதுவா, அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்குப் பொருள்?

நித்தியஜீவனைக் கொடுக்கக் கூடிய இந்த அறிதலுக்கு உதாரணமாக ஆதி 4:1 வசனத்தை நாம் பார்க்கலாம். அங்கே, தேவனால் படைக்கப்பட்ட முதல் மனுஷனாகிய ஆதாம், தன் மனைவியாகிய ஏவாளை **அறிந்தான்** என்றும், **அந்த அறிதலில் காயீன் என்ற ஜீவன் பிறந்தது** என்றும் பார்க்கிறோம். அதற்கு முன்பாக, அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாக இருக்கும்படியாக, தேவன் அவர்களை இணைத்து வைத்தார். (ஆதி 2:24) இந்த தேவத்திட்டத்தின்படியாக, ஆதாம் அவளை அறிந்தான். **இந்த அறிதலில் புதிய ஜீவன் பிறந்தது.** அப்படியானால், தேவனால் திட்டமிடப்பட்டு ஏற்படுத்தப்பட்ட, ஒரு புதிய ஜீவனைக் கொண்டு வந்த, இந்த அறிதல் எப்படிப்பட்டது? சொல்லுங்கள். ஆதாம், ஏவாளை ஊனோடும்,

உணர்வோடும், உயிரோடும் அறிந்திருக்க வேண்டுமென்பதில் நமக்குச் சந்தேகமில்லை. இப்படி அறிந்ததின் பலன் தான் **காயீன் என்ற புதிய ஜீவன்.**

சரீரப் பிரகாரமாக ஒரு ஜீவனைப் பிறப்பிப்பதற்கே, அதுவும் எழுபது வருஷம் அல்லது பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷம் [சங்90:10]. வாழக்கூடிய ஒரு ஜீவனைப் பிறப்பிப்பதற்கே இந்தளவு ஒன்றித்துப்போதல் அவசியமானால், ஆவிக்குரிய ரீதியில், நித்திய காலத்திலும் வாழ்ந்திருக்கக் கூடிய ஜீவனைப் பிறப்பிப்பதற்கு எந்தளவு பிதாவோடும், குமாரனோடும் நாம் ஒன்றித்துப் போக வேண்டுமென்பதை எண்ணிப் பாருங்கள். நாம், நித்திய ஜீவனுக்காக, பிதாவையும், குமாரனையும், நம்முடைய சரீரத்திலும், உணர்விலும், உயிரிலும் அறிந்தே ஆக வேண்டும்.

அப்படியானால், அது எப்படி என்ற நியாயமான கேள்வி இங்கே வருகிறது. சரி, எப்படித்தான் என்று கொஞ்சம் முயன்று பார்ப்போமே!

I. **பிதாவையும், குமாரனையும் சரீரத்தில் அறிதல் :**

இம்மையிலும், மறுமையிலும் நித்தியஜீவனை நாம் ஒவ்வொருவரும் பெற்றுக் கொள்வதற்கு நாம் செய்ய வேண்டிய காரியங்களில் ஒன்று, நாம் பிதாவையும், குமாரனையும் சரீரத்தில் அறிவதாகும்.

நம்முடைய இரட்சகர் வாழ்ந்த காலத்திலிருந்து சுமார் 2000 ஆண்டுகள் கழித்து நாம் வாழ்ந்து கொண்டுள்ளோம். அப்படியிருக்க அவரை சரீரத்தில் கண்டு அறிவது நடக்கக்கூடிய காரியமா என்று நீங்கள் கேட்பது புரிகிறது. வேத வசனமும் நாம் இனிமாம்சத்தில் அறியோம் என்று தான் திட்டமாகக் கூறிவிட்டது. [2 கொரி 5:16]

ஆயினும் கூட, 2 கொரிந்தியர் 4:10 ம் வசனத்தை நீங்கள் கவனியுங்கள். 'கர்த்தராகிய **இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே** விளங்கும்படிக்கு இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம்' என்கிறார். இங்கே பவுலடியார் இயேசுவின் ஜீவனை, அதாவது இயேசுவை போன்று நீத்தியஜீவனை எங்கள் சரீரத்தில் பெற்றுக்கொள்ளும்படி, அவருடைய மரணத்தை, அதாவது, அவருடைய பாடுகளை எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம் என்கிறார். பவுலடியார் ஊழியத்தினிமித்தம் பட்ட பாடுகள்

வேதாகமத்தை வாசிக்கிற ஒருவருக்கு விளங்காமல் போகாது. இது குறித்து தான், 1 கொரி 15:31 ல் கூறும் போது, '**நான் அனுதினம் சாகிறேன்**' எனக் கூறியுள்ளார். இன்னும், பிலிப்பியருக்குக் கூறும் போது, இப்படி நான் அவரையும், அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் நிச்சயத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளானேன் என்கிறார் (பிலி 3:10) மேலும், கலாத்தியருக்கு எழுது போது, '**கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்தில் தரித்துக் கொண்டிருக்கிறேன் என்றும் கூறுகிறார்** (கலா 6:17).

பரலோகத்தின் தேவன், பவுலடியாரைக் குறித்து வெளிப் படுத்தியிருக்கும் இக்காரியங்களைக் கவனித்தால், அப் போஸ்தலன் பவுல் பிதாவையும், குமாரனையும் சரீரத்தில் எப்படி அறிந்தார் என்றும், அதன் மூலம் நாம் அவரை நமது சரீரத்தில் எப்படி அறிய வேண்டுமென்பதும் நன்றாகவே விளங்கும். ஒரு வேளை, நான் சத்தியத்தின் படி கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, வசனத்தின்படியாக வாழந்து கொண்டி ருக்கிறேன் என்று சொல்வோமானால். பிதாவினிமித்தம், கிறிஸ்துவினிமித்தம் நாம் இந்தளவு பாடுகள் படுகிறவர்களாக இருக்கிறோமா? அல்லது நமது விசுவாசத்தினிமித்தமும் பாடுகள் வரும் போது அவைகளை ஏற்றுக்கொண்டு, தொய்வில்லா கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதற்கு ஆயத்தமாக உள்ளோமா? சொல்லுங்கள். நாம் பார்க்கும் இந்தக் கருத்தினடிப்படையில் தான், அப்போஸ்தலன் பவுல் உரோமை யருக்குச் சொல்லும்போது, '**உங்கள் சரீரங்களை தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும்**' என்று கூறுகிறார் (ரோமர் 12:1) ஆக, நித்தியஜீவனை இம்மையிலும், மறுமையிலும் பெற்றுக் கொள்வதற்கு எப்படிப்பட்ட அறிதல் அவசியம் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

ஒருவேளை, இன்னும் நீங்கள் உண்மையான சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, இப்பூமியில் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளாத ஒரு வாழ்க்கை வாழ்கிறவர்களாக இருந்தால், இப்புதிய ஆண்டில், நித்திய ஜீவனுக்கானதொரு வாழ்க்கை வாழத் தீர்மானியுங்கள். என் வசனத்தைக்கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக் கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு என்று (யோவான் 5:24) தேவன் சொல்லுகிறபடியால், நீங்கள் உடனடியாக விசு வாசிகளாக மாறுங்கள்.

**II பிதாவையும், குமாரனையும் உணர்வோடும் உயிரோடும் அறிதல் :**

இம்மையிலும், மறுமையிலும் நித்தியஜீவனை நாம் ஒவ்வொருவரும் பெற்றுக் கொள்வதற்குச் செய்ய வேண்டிய இன்னொரு காரியம், அவரை நம்முடைய உணர்வோடும், உயிரோடும் அறிதல் ஆகும்.

இப்படி உணர்வோடும், உயிரோடும் அறிவது எப்படி என்பதற்கு நாம் நேரிடையான வசனங்களைக் கொடுக்க டியாவிட்டாலும், இது சம்பந்தமாக சில காரியங்களைக் கற்றுக்கொள்ளடியும் என நம்புகிறேன். உணர்வு என்பது நம்மில் இரண்டறக்கலந்த ஒன்று என நாம் கூறலாம். அந்த உணர்வு சில நேரங்களில் தானாகவே செயல்படும், இன்னும் சில நேரங்களில் அதைச் செயல்படச் செய்ய வேண்டும். சங்கீதம் 53:2 ம் வசனம் இவ்விதம் கூறுகிறது. ‘தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று பார்க்க, தேவன் பரலோகத்திலிருந்து மனுபுத்திரரைக் கண்ணோக்கினார்‘ என்று. சங்கீதங்களின் காலந்தொட்டு, இன்றளவும் தேவனைத் தேடுகின்ற நிலை, எந்தவொரு மாற்றம் இல்லாமல் அப்படியே தான் இருக்கிறது. பக்தி என்பதும், தேவபயம் கடைச்சரக்காகி விட்டது. தேவனை அறியாதவர்களிடம் தான் இந்த நிலையென்றில்லை, அறிந்திருக்கிறோம் என்று சொல்லுகிறவர்களின் வாழ்க்கை நிலையும், மன நிலையும் இதே கதியில் தான் இருக்கிறது.

அப்போஸ்தலன் பவுல், எபேசியருக்கு எழுதும் போது, அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதயக் கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே, தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்தது, உணர்வில்லாதவர்களாய், நடப்பிக்கிறார்கள் என்று கூறுகிறார் [எபே 4:18,19] தேவனுடைய காரியத்தில் உணர்வில்லாதவர்களாயிருப்பது நம்மை தேவனால் கிடைக்கும் ஜீவனுக்கு அந்நியர்களாக்கி விடுகிறதாம். அப்படியானால், தேவகாரியத்தில் நாம் இயல்பாகவே உணர்வுள்ளவர்களாயிருந்து செயல்படுகிறவர்களாக இருக்க வேண்டுவது அவசியம். அந்த உணர்வு எப்பொழுதும் நமக்குள்ளாக இருக்க வேண்டும். நேரம் வரும்போது அந்த உணர்வு பற்றி தெரிந்து செயல்பட வேண்டும். நாம் தயாரா?

இதற்கு உதாரணமாக, பழைய ஏற்பாட்டில் நம்மெல்லாருக்குமே தெரிந்த ஒரு சம்பவத்தை உங்களுக்கு எடுத்துக் கொடுக்கிறேன். அது தாவீது கோலியாத் சம்பவம். சுமார் 10 அடி உயரம் கொண்ட ஆஜானுபாகுவான உடல்வாகும், போர்க் கலை

அனைத்தும் தெரிந்து, சரீரத்தின் எல்லா அவயவங்களுக்கும் பாதுகாப்புத் தரும் தற்காப்பையும், எதிரியைத் தாக்குவதற்குத் தேவையான அனைத்து வகை ஆயுதங்களையும் கொண்டிருந்த பெலிஸ்தனாகிய கோலியாத், தேவனுடைய ஜனமாகிய இஸ்ரவேலை தினம் தினம் நிந்தித்ததை ஆடு மேய்க்கும் ஒரு பொடியனாக இருந்த தாவீது கேட்ட போது, தன் உணர்வுகளில் கொதித்து எழுந்தான். (1சா. 17 அதி) தன் எதிரில் நிற்பது யார் என்று அவன் கிஞ்சித்தும் கவலைப்படாமல், இவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்திப்பதற்கு விருத்தசேதனம் இல்லாத இந்த பெலிஸ்தன் எம்மாத்திரம்' என்றான் (17:26). தேவன் என்று வரும் போது, தேவ காரியம் என்று சொல்லும் போது இவனுடைய உணர்வுகள் எப்படி செயல்பட்டிருக்கிற தென்பதைக் கவனியுங்கள். நாம் கூட, நித்திய ஜீவனைச் சுதந்தரிப்பதற்கு இப்படிப் பட்ட செயல்பாடு உடையவர்களாகத் தான் இருக்க வேண்டும்.

உயிரோடு நாம் அவரை அறிய வேண்டுமென்பதற்கு எடுத்துக் காட்டாக, கொலோ 3:3–ம் வசனத்தை கவனியுங்கள். 'ஏனென்றால் நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது'. அதாவது, கொலோசெ பட்டணத்தார் பாவத்திற்காக மரித்தார்கள். கிறிஸ்துவின் சுவிசேஷத்தினிமித்தம் மரித்தார்கள். அப்படி மரித்ததினாலே என்ன நடந்தது? அவர்களுடைய, உயிராகிய ஜீவன், கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்து விட்டது. அதாவது, அந்தப் பரிசுத்த வான்களின் உயிரும், கிறிஸ்துவின் உயிரும், தேவனுடைய உயிரும் ஒன்றாகி விட்டது.

ஆகையால், அருமையானவர்களே. பரலோக வாழ்வுக்காக ஆசைப்படுகிறவர்களே, அதைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று பாடுபடுகிறவர்களே, நீங்கள் ஒவ்வொருவரும் பிதாவையும், குமாரனையும் இந்தளவு அறிந்தவர்களாக உள்ளீர்களா? சொல்லுங்கள். பூமியிலே ஆரம்பமாகி, பரலோக வாழ்விலும் நிலைத்திருக்கக்கூடிய இந்த நித்திய ஜீவன் போகிற போக்கிலே பெற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று அல்ல. ஒருவேளை, நாம் அவரை இவ்விதம் அறியாத ஒரு வாழ்க்கையை, போலியான கிறிஸ்தவ வாழ்க்கையை நடத்திக் கொண்டிருப்போமானால், ஒரு நாளில் அவர் அறிந்து கொள் வார் (வெளி 2:3) அப்பொழுது, நாம் தப்பிக்கவே முடியாது...

ஆகவே, நாம் ஒவ்வொருவரும், இப்புதிய ஆண்டில், நம்முடைய இரட்சகர் பாரத்தோடு நமக்காக ஜெபித்தது போல, பிதாவையும், குமாரனையும் சத்திய வசனங்களின்படி அறிந்து இம்மையில் நித்தியஜீவன் உடையவர்களாய் வாழ்ந்து, மறுமையிலும் நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ளுவோம்! ஆமென்!!

# கிறிஸ்தவர்களாக இல்லாத கொஞ்சம் பேர்

J.C. சோட்

அநேகர் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால், தேவ வார்த்தைகளின்படி இப்படிச் சொல்லிக் கொள்ளுகிற எல்லோரும் கிறிஸ்தவர்கள் அல்ல. ஒரு வேளை இப்படிச் சொல்லுவது உங்களுக்கு அதிர்ச்சியாக இருக்கலாம். ஆயினும் இது உண்மை.

தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிற ஒரு தகப்பனுக்கும், ஒரு தாய்க்கும் ஒருவன் பிள்ளையாகப் பிறப்பதினாலேயே அவன் கிறிஸ்தவனாகி விடுவதில்லை. மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்ட மற்ற மதங்களில் சரீரப் பிறப்பு ஒருவனை புத்தனாகவோ, இஸ்லாமியனாகவோ, இந்துவாகவோ மாற்றுவதற்குப் போதுமானதாக உள்ளது. கிறிஸ்தவத்தில் இருக்கும் கத்தோலிக்கப் பிரிவார் கூட இதே விதமான சிந்தை கொண்டவர்களாகவே உள்ளனர். இருப்பினும், புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்தில் இக்கருத்து உண்மையல்ல. கிறிஸ்தவக் குடும்பத்தில் ஒருவன் பிறப்பதினாலே அவன் கிறிஸ்தவனாகி விடுவதில்லை. ஒருவன் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து கீழ்ப்படிதலோடு அவரைப் பின்பற்றி தண்ணீர் ஞானஸ்நானத்தின் மூலம் மறுபடியும் பிறந்து தேவனுடைய குடும்பத்தில் பிரவேசிக்கும் போதே [ யோவான் 3:3–5] அவன் கிறிஸ்தவனாகிறான்.

குழந்தையாக இருக்கும் போது தண்ணீரால் தெளிக்கப்பட்டாரென்பதாலேயே அவன் கிறிஸ்தவனாகி விடுவதில்லை. முதலாவது, ஞானஸ்நானம் என்பது தண்ணீரால் தெளிக்கப்படுவதல்ல. வேதாகம ஞானஸ்நானம் என்பது தண்ணீருக்குள் அடக்கம் பண்ணப்படுவது[ கொலோ. 2:12; ரோமர் 6:3,4; அப்.8]. இரண்டாவது, ஞானஸ்நானம் பெறுகிற ஒருவர் சத்தியத்தைக் கேள்விப்பட்டு [ரோமர் 10:17] விசுவாசித்து[ ரோமர் 10:10] தன்னுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்பி [ லூக்கா 13:3], இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று வாயினால் அறிக்கையிட்ட [மத்.10:32] பிறகே ஞானஸ்நானம் பண்ணப்பட வேண்டும். ஞானஸ்நானம் பெறுகிற ஒருவருக்காக வேறொருவர் இதைச் செய்ய முடியாது. மூன்றாவது, நன்மை தீமை அடையும் வயதை எட்டும் வரைக்கும் குழந்தைகள் தங்களுடைய செயலுக்குப் பொறுப்பாளிகளாக மாட்டார்கள் [ மத்.18:1–3]. ஆகையால், ஒரு குழந்தைக்கு ஞானஸ்நானம் என்ற பெயரில்

தண்ணீர் தெளிக்கப்படுவதால் ஒரு குழந்தை கிறிஸ்தவராகி விடாது. கிறிஸ்துவுக்கும், அவருடைய உபதேசங்களுக்கும் ஒருவன் தன்னை ஒப்புக்கொடுப்பதின் மூலமே கிறிஸ்தவனாக முடியும். தெளிப்பு ஞானஸ்நானம் மனித போதனை.

இன்றும், பல பிரிவனைச் சபையார் ஏற்றுக் கொண்டிருப்பது போல், இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிப்பதாலேயே ஒருவன் கிறிஸ்தவனாகிவிட முடியாது. கிறிஸ்தவனாவதற்கு ஒருவன் இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்க வேண்டுமென்பது உண்மை தான். ஆனால், அதுவே போதுமானதல்ல. அப்படியிருக்குமானால் பிசாசுகள் விசுவாசித்து நடுங்குகிறபடியால் பிசாசுகள் கிறிஸ்தவர்களாயிருக்க முடியும். (யாக்.2:19). ஒருவன் கிறிஸ்தவனாவதற்கு, கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும். அந்த விசுவாசம் கிறிஸ்துவின் உபதேசச் சட்டங்களுக்கு முழுமையாகக் கீழ்ப்படிய வேண்டுமென்ற விருப்பம் உடையதாக இருக்க வேண்டும். (எபி.5:8,9; Iபேதுரு 2:21). இன்னும் அந்த விருப்பம் இறுதிவரை உண்மையாயிருக்க வேண்டுமென்பதாகவும் இருக்க வேண்டும் ( வெளி.2:10).

ஏதோ ஒரு பிரிவினைச் சபையில் ஒருவர் அங்கமாகியிருப்பதினாலேயே அவர் கிறிஸ்தவனாகி விடுவதில்லை. அநேக பிரிவினைச் சபைகள் உண்டு. அவைகளில் அவர்கள் அங்கமாக இருப்பதால் நாங்கள் கிறிஸ்தவர்களென்று சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால், அவர்கள் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள். கிறிஸ்துவைப் பின்பற்றும் போது தான் கிறிஸ்தவர்களாகிறார்கள். கிறிஸ்துவைப் பின்பற்றுவதின் விளைவாக ஒருவர் ஒரு போதும் ஏதாவதொரு பிரிவினைச் சபையில் அங்கமாகிவிட முடியாது. ஏனெனில், இயேசுவானவர் இப்பூமியில் வாழ்ந்த போதும், மனிதர்களுக்காக இயேசு தம்முடைய வார்த்தைகளை வெளிப்படுத்திய போதும் எந்தவொரு பிரிவினை சபையும் இருக்கவில்லை!

வேதாகமம் கிறிஸ்தவர்களை மட்டும் உருவாக்குகிறது (அப்.11:26). வேதாகமம் நம்மைப் பிளவுபடுத்தாது. மாறாக, கிறிஸ்துவில் நம்மை ஒற்றுமைப்படுத்தவே செய்யும் (Iகொரி.1:10). ஆகவே ஒருவர் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட ஏதாவதொரு சபையில் அங்கமாயிருந்தால், அவன் வேத வசனங்களின்படியான ஒரு கிறிஸ்தவன் அல்ல. ஒருவேளை நானும் கிறிஸ்தவன் தான் என்று பல காரணங்கள் கூறி வாதிடலாம். ஆனால், உண்மை என்னவெனில் புதிய ஏற்பாட்டு

உபதேசத்தின்படி அவன் ஒரு கிறிஸ்தவனல்ல. அவன் வாதிடுவது போல கிறிஸ்தவன் தான் என்றால், அவன் பிரிவினை சபையில் அங்கமாக இல்லாமல் கர்த்தருடைய சபையின் அங்கத்தினராக இருப்பான். [ ரோமர் 16:16]. மற்றும் ஒரு கிறிஸ்தவனாக மாத்திரமே இருப்பான் [அப்.2:47˙ பேதுரு 4:16]. வேதாகமத்தைத் திறந்து படித்து உண்மையை நீங்களே தெரிந்து கொள்ளுங்கள்.

ஒருவன் தன்னைக் கிறிஸ்தவனென்று சொல்லிக் கொள்வதாலேயே கிறிஸ்தவனாகி விடுவதில்லை. இந்த உலகத்தில் ஒருவன் தன்னை எப்படி வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளலாம். ஆயினும், அப்படிச் சொல்லிக் கொள்வதற்கான நிரூபணங்களையும், ஆதாரங்களையும் ஒருவனால் கொடுக்க முடியவில்லையானால், அவன் போலியானவனாகவும், ஏமாற்றுக்காரனாகவும் இருப்பான். வேத ஆதாரமில்லாமல் யார் வேண்டுமானாலும் தன்னை ஒரு கிறிஸ்தவன் என்று சொல்லிக்கொள்ள முடியும். ஒருவன் தன்னைப் பற்றி என்ன சொல்லிக்கொண்டாலும், தன் நிலையை **வேத வசனத்தைக் கொண்டும்,** வாழ்க்கையின் மூலமும் தன்னை ஒரு கிறிஸ்தவன் என்று நிரூபிக்க முடியவில்லையென்றால், அவன் கிறிஸ்தவனே அல்ல [மத்.7:21–23].

உங்கள் ஆன்மீக நிலையை நீங்கள் சீர்தூக்கிப் பார்க்கும்படி நான் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? புதிய ஏற்பாட்டு உபதேசத்தின் படி நீங்கள் கிறிஸ்தவரா? கிறிஸ்தவர் தான் என்பதை உங்களால் நிரூபிக்க முடியுமா? கர்த்தருக்கு நீங்கள் கீழ்ப்படிந்து விட்டீர்களா? தேவனுக்கு நீங்கள் உண்மையாயிருக்கிறீர்களா? அப்படி இல்லையானால், கர்த்தராகிய இயேசுவை விசுவாசித்து பாவங்களிலிருந்து மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்து, பாவ மன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற்று உண்மையான கிறிஸ்தவனாக மாறுங்கள் [மாற்கு 16:15,16; அப்.2:38]. அப்பொழுது கிறிஸ்து உங்களை இரட்சித்து அவருடைய சபையில் உங்களைச் சேர்ப்பார். நீங்கள் எந்தப் பிரிவினை சபையையும் சேராமல், வேதாகமம் சொல்லும் கிறிஸ்தவராக மாத்திரம் இருப்பீர்கள் [அப்.2:47;11:26]. இறுதியாக, அவருக்கு உண்மையாக இருப்பதன் மூலம், நித்திய காலத்துக்கும் நீங்கள் இரட்சிக்கப்பட்டவர்களாக முடியும் [ ரோமர் 6:23; யோவான் 14:1–3].

✝

# புத்தியுள்ள ஸ்திரீ

Sis. ரேச்சல் ராஜநாயகம்

கிறிஸ்துவுக்குள் அருமையானவர்களே. தேவன் கிருபையாய் கூட்டிக்கொடுத்த இப்புதிய ஆண்டிற்குள் அடியெடுத்து வைத்திருக்கும் சிலாக்கியத்தை பெற்றிருக்கிறோம். பெண்களுக்கான ஆலோசனைகளை நாம் வேதாகமத்தின் துணை கொண்டு பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஏதோ, கட்டுரையை வாசிப்பதோடு நின்று விடாமல் அதன்படி வாழவும், நம் குடும்பத்தாரையும் வசனம் சொல்கிறபடி வாழவைப்பதும் நம்மேல் விழுந்த கடமையாகும் ஒரு குடும்பம் ஆவிக்குரிய. சரீர நன்மைகளால் நிரப்பப் படவேண்டுமென்றால் அது முழுக்க, முழுக்க அக்குடும்பத்தில் உள்ள பெண்ணின் கையில் தான் இருக்கிறது. வேதாகமத்தில் தொடக்க முதல், இறுதி வரை நிறைய பெண்களின் பெயர்கள், செயல்பாடுகள் இடம் பெற்றுள்ளது. நீதிமொழிகளில் ஞானி பெண்களைப் பட்டியலிடுகிறார். அதில் 14 ஆம் அதிகாரம் தல் வசனத்தில் 'புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள். புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளினால் வ அதை இடித்துப் போடுகிறாள்'. [நீதி 14:1] என்று வாசிக்கிறோம். வீடு கட்டப்படுவதற்கும், இடித்துப் போடப்படுவதற்கும் அங்கே பெண் காரணமாக்கப்படுகிறாள். 'கர்த்தர் வீட்டை கட்டாரகில் அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா' என்று சங்.127:1ல் வாசிக்கிறோம். புத்தியுள்ள ஸ்திரீயும் வீட்டை கட்டுகிறதுடன், கர்த்தரும் வீட்டைக் கட்டுகிறார் என்றால், இதில் உள்ள உண்மையை நாம் நன்றாக விளங்கிக் கொள்ளவேண்டும். வீடு என்றால் ஏதோ கட்டிடத்தை குறிப்பிட்டுப் பேசப்படும் ஒன்றல்ல. வீட்டில் உள்ள மக்களை அதாவது குடும்பத்தைப் பற்றி பேசுகிறது.

ஒரு ஸ்திரீ எவ்வாறு புத்தியுள்ள ஸ்திரீயாக மாற முடியும்? அவள் பெற்ற பட்டங்களை வைத்தா? அவளின் அழகை வைத்தா ? அவள் குடும்ப அந்தஸ்தை வைத்தா? இல்லை. மாறாக, அவள் தேவனையும், இயேசு கிறிஸ்துவையும், ஆவியானவர் வெளிப்படுத்தியுள்ள வேத வசனங்களையும் எந்த அளவு அறிந்து வைத்துள்ளாள் என்பதைப் பொறுத்தே புத்தி உள்ளவள் அல்லது புத்தி அற்றவள் என்று பிரித்துப் பேசப்படுகிறாள். வேதாகமம் சொல்லுகிறபடி ஒரு ஸ்திரீ தன்

வீட்டைக் கட்டும்போது அது கர்த்தரால் கட்டப் படுகிறது. வேதத்தின் படி ஒரு ஸ்திரீயானவள் மூன்று விதத்தில் கடமைப்பட்டுள்ளாள் அல்லது செயல்பாடு உடையவளாய் இருக்கிறாள்.

1. தனக்கும் தேவனுக்கும் இடையே உள்ள செயல்பாடு
2. தனக்கும் தன் கணவனுக்கும் இடையே உள்ள செயல்பாடு
3. தனக்கும் தன் பிள்ளைகளுக்கும் இடையே உள்ள செயல்பாடு

இந்த மூன்றிலும் அவள் வேதம் சொல்லுகிறபடி வாழ்ந்து விட்டால், உண்மையிலுமே அவள் புத்தியுள்ள ஸ்திரீதான். கட்டாயம் தன் வீட்டை கட்டிவிடுவாள். மேற்சொன்ன காரியங்களில் அவள் தவறு செய்தாளென்றால் தன் சொந்தக் கையினாலேயே அதை இடித்துப் போடும் துர்ப்பாக்கியத்தையும் தானே வரவழைத்துக் கொள்கிறாள். இதில் முதலாம் செயல்பாட்டில் ஒரு பெண் குறை வைத்து விட்டால், மீதி இரண்டிலும் அவள் தோற்றுப் போவது நிச்சயம் தனக்கும், தேவனுக்குமிடையே குறையை வைத்துக் கொண்டு குடும்பத்தை கட்ட முடியாது. கணவனுக்கும், பிள்ளைகளுக்கும் உண்மையாயும் இருக்க முடியாது.

உலகெங்கிலும் இருக்கும் கிறிஸ்துவின் சபைகள் வளர வேண்டிய அளவு வளராமல் இருப்பதற்கு காரணம் சபையில் இருக்கும் பெண்கள் தேவனோடும், தேவனுக்கடுத்த காரியங்களிலும் வேத வசனம் சொல்லுகிறபடி வாழாததான். தேவன், கணவன், பிள்ளைகள் இந்த மூன்று சம்பந்தங்களிலும் தோல்வியடைந்து எல்லாவற்றையும் தன் சொந்த கைகளினால் இடித்து, அழித்துப் போட்ட பெண்ணுக்கு தலைசிறந்த உதாரணம் 1 ராஜ : 16:31 ல் அறிகமாகும் யேசபேல் தான். ஏவாளின் வழி வந்த பெண்களிலேயே திருத்த முடியாத, அநீதியும், மனசாட்சி என்பது மருந்துக்குக் கூட இல்லாத கொடூரத்தன்மை கொண்டவள் யேசபேலைத் தவிர யாரும் இருக்க மாட்டார்கள். அவளோடு போட்டியிடக்கூடிய ஒரு ஆள் யாராவது இருக்கிறார்களா? என்றால் அது அவள் மகள் அத்தாலியாதான்.

முதலாவதாக இந்த யேசபேல் தேவமனிதனாகிய எலியா வை திண்டாட வைக்கிறாள். தேவனுடைய பிள்ளைகளை துன்புறுத்துவதும், தேவனைத் துன்புறுத்துவதும் ஒன்று தான்.

1ராஜா 18:4 ல் ‘யேசபேல் கர்த்தரின் தீர்க்கதரிசிகளை சங்கரிக்கிறபோது 1ராஜா 18:13 ல் ‘யேசபேல் கர்த்தரின் தீர்க்கதரிசிகளைக் கொன்று போடுகிறபோது, 1ராஜா 19:2 ல் யேசபேல் எலியா தீர்க்கனிடம் சபதம் போடுகிறாள். ‘போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும்‘ என்று மகா தீர்க்கன் மனடைந்து சொல்லுமளவுக்கு இந்த யேசபேல் காரணமாயிருக்கிறாள். யெகோவா மெய்யான தேவன் என்பதை ஏற்றுக் கொள்ள மறுக்கிறாள். இன்றைக்கு கிறிஸ்தவத் தாய்மார்களாகிய நம் நிலை என்ன? நமக்கும் தேவ தாசர்களுக்கும் உள்ள உறவு எப்படி இருக்கிறது?

இரண்டாவதாக, இந்த யேசபேல் தன் கணவனோடு தன் உறவை எப்படி வைத்துக்கொண்டாள் என்று பார்ப்போம். இவள் கணவன் பெயர் ஆகாப். (ராஜா 21:1-16) வசனங்களில் நாபோத்தின் திராட்சத் தோட்டத்தை ஆகாப் எவ்வாறு அபகரித்துக் கொண்டான் என்ற சம்பவம் இடம் பெற்றுள்ளது. யேசபேல் தன் வஞ்சக புத்தியோடு தந்திரம், பொய் இவற்றை யும் காட்டி நல்லவனாகிய நாபோத்தை கொன்று போடுகிறாள். ‘தன் மனைவியாகிய யேசபேல் தூண்டிவிட்டபடியே, கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய, தன்னை விற்றுப்போட்ட ஆகாபைப்போல ஒருவனுமில்லை‘. (ராஜா 21:25). தன் கணவனின் பெலவீனத்தை தனக்கு சாதகமாக எடுத்துக் கொண்டாள். தான் என்ற அகங்காரம் அவளுக்கு மேலோங்கி இருந்தது. நியாயத்துக்காக போராட வேண்டிய இராஜாவாகிய ஆகாப், தன் மனைவியின் தந்திரமான ஆலோசனைக்கு அடிமையாகி நீதியை விற்றுப்போட்டான். இன்றைக்கும் அநேக ஸ்திரீகள் தங்கள் கணவன்மார்களை தேவனுக்கடுத்த காரியங்களில் தைரியமாக எழுந்து செயல்பட முடியாமல் தடுத்து விடுகின்றனர். சத்தியத்தை, சத்தியமாக பேச விடாமல் செய்து விடுகின்றனர்.

மூன்றாவதாக, இந்த யேசபேல் தன் பிள்ளையாகிய அத்தாலியாவிடம், எப்படி தாக்கத்தை ஏற்படுத்தினாள் என்று பார்ப்போம். பாபிலோனிய சாம்ராஜ்யத்தின் மகா தீர்க்க தரிசியாகிய எசேக்கியேலின் புத்தகம், 16 ஆம் அதிகாரம்: 44 ஆம் வசனத்தில் கூறியுள்ளபடி ....... தாயைப்போல் மகள் என்ற பழமொழிக்கு பொருத்தமாக இவர்கள் வாழ்க்கையும் இருந்தது. பிரியமானவர்களே, நம்டைய ஒவ்வொரு செயலும் நம் பிள்ளைகளில் பிரதிபலிக்கும் என்பதை மறந்துவிடக் கூடாது.

அத்தாலியா தன் தாயிடமிருந்து நல்ல காரியங்களை பார்த்ததுமில்லை, கேட்டதுமில்லை, தன் தாய் செய்தது மில்லை, இவளுக்குச் சொன்னதுமில்லை.

| | | |
|---|---|---|
| பார்த்திராதது | : | மோசேயின் பிரமாணங்களை தன் தாய் வாசித்து அத்தாலியா பார்த்ததேயில்லை. |
| கேட்காதது | : | அற்புதமான மனிதர்களாகிய ஏனோக்கு நோவா, ஆபிரகாம், ஈசாக்கு. மோசே, சாமுவேல், தாவீது எபிரெய விசுவாச வீரர்கள் பற்றிச் சொல்லி இவள் கேட்டதுமில்லை. |
| சொல்லாதது | : | திஸ்பியனாகிய எலியா தீர்க்கதரிசியைப் பற்றி ஒருவார்த்தை கூட தன் மகளுக்கு யேசபேல் சொல்லவில்லை. |
| செய்யாதது | : | நன்மை, தேவகாரியங்கள், ஈவு, இரக்கம், அன்பு போன்ற நல்ல காரியங்களை இவள் செய்ததே |

இப்படி எந்த காரியத்திலும் முன் உதாரணமாய் இல்லாத ஒரு தாய் எப்படி தன் பிள்ளையை மட்டும் நல்லவளாக வளர்ப்பாள், தன் குடும்பத்தை கட்டுவாள் என்று எதிர்பார்க்கடியும்? அத்தாலியாளும் தன் கணவனாகிய யோராமை கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்ய வைக்கிறாள் (2 நாளாகமம் 21:5,6).

தன் பொல்லாத குணத்தால் தேவனோடு எதிர்த்து, தன் கணவனையும் நீதியிலிருந்து பிரளச் செய்து தன் மகளையும் துன்மார்க்கமாய் வளர்த்து தன் சொந்த வீட்டை தன் சொந்த கைகளினால் இடித்துப் போட்ட இந்த யேசபேலைப் போல புத்தியற்ற ஸ்திரீகளாய் நாம் இருக்கக்கூடாது. ✝

**தேவ சித்தம் எது?**

| | |
|---|---|
| 1. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படுவது. | – 1தீமோ 2:4 |
| 2 சத்தியத்தை அறியும் அறிவை அடைவது. | – 1தீமோ 2:4 |
| 3. எல்லாவற்றிலும் ஸ்தோத்திரம் செய்வது. | – 1தெச 5:18 |
| 4. வசனத்தை கைக்கொள்வது. | – மத்தேயு 7:21 |
| 5. நன்மை செய்து பாடு அனுபவிப்பது. | – 1பேதுரு 3:17 |

வாலிபர் பகுதி

# வெளிச்சம் உண்டாகக்கடவது

Dr. ஏபில் நாயகம்

இருளின் அதிகாரத்திலிருந்து மனுக்குலத்தை மீட்டெடுக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாகவும், திட்டமாகவும் இருந்தது. ஏதேன் தோட்டத்திலே தனக்கும், தான் உண்டாக்கின மனிதனுக்கும் இருந்த உறவில் ஏற்பட்ட பிளவு சீர் செய்யப்பட வேண்டும் என்பது தேவனின் பிரதான திட்டமாய் இருந்தது. எனவே, காலம் நிறைவேறின போது தன்னுடைய சொந்தக் குமாரனை இந்த பூமிக்கு அனுப்பினார். குாரனாகிய கிறிஸ்து என்ன செய்வார் என்பது ஏற்கவே தீர்க்கதரிசியாகிய ஏசாயா மூலம் முன்னறிவிக்கப்பட்டது. ஏசாயா 9அதிகாரம் 1,2 வசனங்களை வாசித்தால், ... முந்தின காலத்தைப் போல இருண்டிருப்பதில்லை... என்றும் இருளில் நடக்கின்ற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின் மேல் வெளிச்சம் பிரகாசித்தது என்றும் வாசிக்கிறோம். மத்தேயு 4 ஆம் அதிகாரம் 14 மற்றும் 15 ஆகிய வசனங்களில் அந்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றுதலை நாம் வாசிக்க முடியும். பாவத்தின் பிடியிலிருந்த இருண்டுபோன உலகத்தை மீட்கும் வெளிச்சமாக இயேசு கிறிஸ்து வந்தார். யோவான் 8–ஆம் அதிகாரம் 12ம் வசனத்தில் நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என் கூறுவதை இயேசு தாமே சொல்லியிருக்கிறார்.

மத்தேயு 5 ஆம் அதிகாரத்தின் 15 வது வசனத்தை வாசிக்கும் போது, நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாய் இருக்கிறீர்கள் என்று தன்னைப் பின் தொடர்ந்து வந்த ஜனங்களுக்கு சொல்லுகிறார். இந்த வசனத்தின்படி பார்க்கும் போது, அவரை பின்பற்றுகிற நாமும் உலகத்திற்கு வெளிச்சமாய் இருக்கிறோம். Iதெசலோனிக்கேயர் 5ஆம் அதிகாரம் 5 ம் வசனம் இப்படியாக சொல்லுகிறது. நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும் பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள் என்று. ஆம், கிறிஸ்துவின் ஒன்றான மெய் சத்தியத்தை அறிந்து அதற்கு கீழ்ப்பட்டிருக்கிற ஒவ்வொருவரும் வெளிச்சத்தின் பிள்ளைகளாயிருக்கிறோம். நாம் இரவுக்கும், இருளுக்கும் உடன்பட்டவர்களல்ல.

எப்படி இயேசுவானவர் பாவத்தால் இருண்டிருந்த பூமியின் மீது ஒளியாக சுற்றிவந்த பொழுது இருளிலிருந்தவர்கள் பெரிய

வெளிச்சத்தைக் கண்டார்களோ, அதுபோல நாமும் நாம் பெற்றுக் கொண்ட ஒளியை உலகத்தார் மத்தியில் பிரகாசிக்கச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். மத் 5 ம் அதிகாரம் 16 ம் வசனத்தில் இயேசு இப்படியாக சொல்கிறார். இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக் கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்துபடி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.

பிரியமானவர்களே! இயேவானவர் ஒளி வீச சரீரத்தில் இப்பொழுது நம்மோடு இல்லை. எனவே, இருளின் அதிகாரத் திலுள்ள மக்களை வெளிச்சத்தின் பிள்ளைகளாக மாற்றத் தேவையான ஜீவ ஒளியை அவர் நம்மிடம் விட்டுச் சென்றிருக் கிறார். எப்படி இயேசுவானர் பூமியில் இருந்த பொழுது இருளிலி ருந்த ஜனங்கள் வெளிச்சத்தைக் கண்டார்களோ அதைப்போல இருளின் அதிகாரத்திலுள்ள இந்த உலகத்தின் மத்தியில் பிரகா சிக்கிற பிள்ளைகளாக நாம் இருக்க வேண்டும். இது நம்மேல் விழுந்த தலையாய கடமையாக இருக்கிறது. இதை நம்மில் எத் தனை பேர் புரிந்திருக்கிறோம்? புரிந்தவர்கள் எத்தனை பேர் உணர்ந்திருக்கிறோம்? உணர்ந்தவர்கள் எத்தனை பேர் பிரகாசித் துக் கொண்டிருக் கிறோம்?

நாம் பிரகாசிக்க வேண்டுமானால், முதலாவது நாம் ஒளி யோடு ஐக்கியப்பட்டிருக்க வேண்டும். ஒளியாகிய இயேசுவோடு தொடர்பு இல்லாதவர்களால் எப்படி பிரகாசிக்க முடியும்? நாம் ஒளியோடு ஐக்கியப்பட வேண்டுமானால் நம்மில் இருளின் கிரி யைகள் காணப்படக் கூடாது. இருளும் ஒளியும் எப்படி ஒன்று சேர இருக்க முடியும்? ஒளியாகிய இயேசுவோடு தொடர்பு வைத் துக் கொண்டு இவ்வுலகத்தில் பிரகாசிக்க வேண்டுமானால் நமக்குள் இருளின் கிரியைகள் இருக்கக் கூடாது. II கொரிந்தி யர் 6ஆம் அதிகாரம் 14 ம் வசனத்தில் பவுல் சொல்வதை கவனி யுங்கள்; ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கிய மேது. ஆம், பிரியமான வர்களே, இருளின் காரியங்களை செய்து ஒருவராலும் வெளிச் சத்தை பிரதிபலிக்க முடியாது.

மெய்யான ஒளியாகிய கிறிஸ்து, நம் வாழ்வின் மூலம் பிற ருக்கு வெளிச்சமாயிருப்பதற்கு நம்மை நாமே அனுமதிக்க வேண்டும். நற்கிரியைகளையும், ஒளியின் கிரியைகளையும் செய்யவும் சிந்திக்கவும் நம் வாழ்வை ஒப்புக் கொடுக்க வேண் டும். I தெசலேக்கேயர் 5:8 ம் வசனத்திலிருந்து நாம் வாசித்தால், நாம் தெளிந்தவர்களாயிருந்து விசுவாசம், அன்பு என்னும்

மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச் சீராவையும் தரித்துக் கொண்டிருக்கக்கடவோம் என்று சொல்லு கிறது. எனவே, ஜீவ ஒளியை பிரகாசிக்கச் செய்கிற ஒரு வாழ்க் கைக்கு ஒப்புக் கொடுத்தல் அவசியமாகும்.

வாலிபர்களாகிய நாம் படிக்கும் கல்லூரிகளிலோ, பணிபுரிகி ற இடங்களிலோ, ஜீவ ஒளியை பிரதிபலிக்கிறவர்களாக இருக்க வேண்டும். நம்முடைய சொற்களால், செயல்களால் நாம் வெளிச்சத்தை பிரகாசிக்கிறவர்களாய் இருக்க வேண்டும். நாம் செய்கிற ஒவ்வொரு காரியமும் பிதாவிற்கு மகிமையை சேர்க்கும் வண்ணம் இருக்க வேண்டும். வெளிச்சத்தின் கிரியை களை செய்ய எந்த விதமான தயக்கமும் இருக்கக் கூடாது. இது சற்று கடினமாய்த் தோன்றினாலும், தேவனின் துணையோடு நாம் முயன்றால், நிச்சயம் இது சாத்தியமே!

பவுல் எபேசியருக்கு இப்படியாக எழுதுகிறார். எபேசியர் 5ம் அதிகாரம் 8ம் வசனத்தில், முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயி ருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கி றீர்கள். வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள். பிரியமானவர்களே, அந்தகார கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளுக்கு எதிர்த்து நின்று இருள் சூழ்ந்த இவ்வுலகத்தில் வெளிச்சமாகப் பிரகாசிக்கவே தேவன் நம்மை அழைத்திருக்கி றார். எனவே, நாம் மதியற்றவர்களாய் இராமல், நம்முடைய அழைப்பை புரிந்து கிறிஸ்துவாகிய ஜீவ ஒளியைப் பிரதிபலிக்கி ற வாழ்க்கை வாழ நாம் நம்மை ஒப்புக் கொடுப்போம். தேவன் நமக்கு உதவியாக இருப்பார். ஆமென்!

✝

## கொடுக்கிறவர்.

| | |
|---|---|
| 1. ஞானத்தை கொடுக்கிறவர் | – யாக்: 1:5 |
| 2. அறிவை கொடுக்கிறவர் | – மீகா:2:5 |
| 3. ஆகாரம் கொடுக்கிறவர் | – சங்:136:25 |
| 4. விஸ்தாரமான இடத்தை கொடுக்கிறவர் | – உபா:33:20 |
| 5. வஸ்திரம் கொடுக்கிறவர் | – உபா: 10:18 |
| 6. சம்பாதிக்க பெலன் கொடுக்கிறவர் | – உபா:8:18 |
| 7. சுவாசத்தை கொடுக்கிறவர் | – ஏசா:42:5 |

# காணாமல் போன ஆடு

சிறுவர் பகுதி

Dr.பிரெய்ஸி

**ஹ**லோ குழந்தைகளே! நீங்கள் அனைவரும் நன்றாக இருப்பீர்கள் என்று நம்புகிறோம்.எங்கள் கட்டுரைகளை ஒவ்வொரு மாதமும் படித்து வருகிறீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.இம்மாதம் இயேசு சொன்ன ஓர் உவமையை பார்ப்போம்.

லூக்கா 15:3–7 இல் காணாமற்போன ஆடு என்னும் உவமையைப் பற்றி வாசிக்கிறோம். ஒரு மேய்ப்பன் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் வனாந்தரத்திலே விட்டு விட்டு, காணாமற்போன ஆட்டைத் தேடுகிறான் என்பதைப் பார்க்கிறோம். அதே போல் நீங்கள் இயேசுவை அடைய உங்களுக்கு வழி இல்லை என்று நினைக்க வேண்டாம்.உண்மையுடன் மனந்திரும்பினால், நிச்சயமாக நம் மேய்ப்பன் இயேசு உங்களைத் தம் தோள்களில் ஏற்றிக்கொள்வதில் மகிழ்ச்சியடைவார்.

லூக்கா 15:7ல் நாம் பார்க்கிறோம், மனந்திரும்பத் அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களை விட மனந்திரும்பும் ஒரு பாவியின் மீது பரலோகத்தில் அதிக மகிழ்ச்சி இருக்கும். எனவே, குழந்தைகளே தேவனிடம் மன்னிப்புக்காக நேர்மையாக மன்றாடுங்கள் மற்றும் தீமையிலிருந்து விலகி இருங்கள். நீங்கள் நிச்சயமாக இழக்கப்பட மாட்டீர்கள்.

நாம் தேவனின் குடும்பம். அவர் நாம் அவரிடம் திரும்புவதைக் கண்டால் மகிழ்ச்சியடைவார். ஆகவே, குழந்தைகளே நாம் தேவனின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, தீமையிலிருந்து விலகி தேவனிடம் செல்வோம்.

God bless

உங்கள் அன்புள்ள
பிரெய்ஸி அக்கா

## வினாக்கள்

1. நம்முடைய மேய்ப்பன் யார்?

2. இவ்வுமையில் எத்தனை ஆடுகள் காணாமல் போயின?

3. காணாமல் போன ஆட்டைக் கண்டுபிடித்த போது மேய்ப்பன் என்னச் செய்தான்?

4. நாம் யாராக இருக்கிறோம்?

5. நாம் எப்படி தேவனிடத்தில் திரும்ப வேண்டும்?

## நாளும் நடப்பும்

1. அனைத்து அரசுப் பள்ளிகளிலும் 1முதல் 5ம் வகுப்பு மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்

2. அனைத்து மின் வாகனங்களுக்கும் 2025வரை 100% வரி விலக்கு : அரசாணை வெளியீடு

3. இந்தியாவில் சுற்றுலாவுக்கு சிறந்த இடம் கேரளா – நியூயார்க் டைம்ஸ் பரிந்துரை

4. பொருளாதார நெருக்கடி : ராணுவ வீரர்களின் எண்ணிக்கையை குறைக்க இலங்கை முடிவு!

5. உலக ஹாக்கி : இந்தியா வெற்றி, முதல் போட்டியில் ஸ்பெயினை வீழ்த்தியது.

# சேர்ந்திருந்தால் சோர்வில்லையே!

## பென்னி மார்ட்டின்

இன்றைய நாட்களில் கிறிஸ்தவ சமுதாயத்தை நாம் சற்று உற்றுப் பார்த்தால் ஒற்றுமை எனும் ஒற்றைச் சொல்லுக்கு மிகப்பெரிய பஞ்சம் ஏற்பட்டிருப்பதை நாம் ஏக மனதாக ஏற்றுக் கொள்வோம். உலகம் முழுவதும் பெரும்பாலான மதங்கள் பிரிவினைகளால் பிளவு பட்டுக் கிடக்கின்றன. இதில் பாதிப்பிரிவினர் ஒரு துருவத்திலும், மீதி பிரிவினர் எதிர்த் துருவத்திலும். பிரிந்து கிடக்கின்றனர். ஒரு பக்கம் மித மிஞ்சிய அடிப்படை வாதத்திலும், மற்றொருபுறம் தாராளமயக் கொள்கையிலும் மூழ்கிக் கிடக்கிறது. இந்த ஆவிக்குரிய உலகில் தங்களைத் தாமே வானுலகின் வாரிசுகள் என்று வாயார வாழ்த்திக் கொள்ளும் கிறிஸ்தவர்கள் மத்தியில் கூட இந்தப் பிரிவினை மனப்பான்மை ஒரு சவாலாகவே இருந்து வருவதை நாம் காண முடியும். ஒரு முனையில் ஒரு சாரார் கிறிஸ்துவின் ஆவியை ஒட்டுமொத்தமாக இழந்து தாங்கள் தனிப்பட்ட ரீதியில் ஏற்றுக்கொள்ள முடியாதவைகளுக்காக ஒவ்வொருவரையும், ஒவ்வொன்றையும் கண்டிக்க தயாராயிருக்கிறார்கள். மறுமுனையில், மற்றொரு சாரார் வேத வாக்கியங்களின் உபதேசத்தை ஒரு ஓரமாக வைத்து விட்டு, கிறிஸ்துவை விசுவாசிப்பதாக சொல்லிக் கொள்கிற எல்லோருக்கும் தங்கள் ஐக்கிய கதவுகளை திறந்து வைப்பதை பார்க்கிறோம்.

ஒற்றுமை என்பதற்கு ஒருமைப்பாடு, ஒருங்கமைவு, ஒன்றாயிருத்தல் போன்ற பொருள்கள் உள்ளன. ஆவிக்குரிய வாழ்வில் ஒற்றுமையின் பங்களிப்பு அளப்பரியது என்பதை அறிந்து கொண்ட சங்கீதக்காரன் அதன் அழகையும், அருமையையும் தன் இருதயத்தின் வார்த்தைகளால் வர்ணிக்கிறார்.'' இதோ சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமானது'' (சங்கீதம் 133:1). இவ்வசனத்தில் ஒற்றுமை எனும் நற்கீற்றை சங்கீதக்காரன் இரண்டு உதாரணங்களைக் கொண்டு விரிவாக விளக்குகிறார். முதலாவது, இந்த ஒற்றுமை இஸ்ரவேலின் பிரதான ஆசாரியனாகிய ஆரோனை அபிஷேகம் பண்ண பயன்படுத்தப்பட்ட நறுமணத் தைலம் போன்றது என்கிறார். எப்படி இந்த நறுமணத் தைலம் அவர்களுடைய சிரசின் மேல் ஊற்றப்பட்டு அவனுடைய அங்கிகளின் மேல் இறங்குகிறதோ, அப்படியே சகோதரர் மத்தியில் காணப்படும் ஒற்றுமையும் ஓர் இனிமையான தாக்கத்தை ஏற்படுத்தி, தனிமையைத் தவிர்த்து நறுமணம் கமழச்செய்கிறது. இரண்டாவதாக, இந்த விலையேறப் பெற்ற ஒற்றுமை எர்மோன் பர்வதத்தின் பனி போன்றது என்கிறார். வடக்கு பாலஸ்தீனத்தில் பார்வைக்கு பளிச்சென காட்சியளிக்கும் எர்மோன் பர்வதத்திலிருந்து இறங்கி வரும் பனி சற்று கனமானதாக இருக்கும். அப்பனி தாவரங்களின் மீது படரும் போது இரவில் மழை பொழிந்தது

போல் காட்சியளிக்கும். எப்படி அப்பனி வறண்ட பாலைவனத்தின் தாவரங்களுக்கு ஊட்டச்சத்து அளிக்கிறதோ அப்படியே ஒற்றுமையும் வீட்டிற்கும் நாட்டிற்கும் ஊக்கத்தை அளிக்கிறது. இது ஆரோக்கியமான ஆவிக்குரிய வளர்ச்சிக்கு ஆதாரமாக இருக்கிறது.

I **ஒற்றுமை ஏன் வேண்டும்?**

பொதுவாகவே, உலகத்தின் மக்கள் அக்கறையின்றி கிறிஸ்தவர்கள் மீது வைக்கும் குற்றச்சாட்டு கிறிஸ்தவர்கள் ஒற்றுமை இல்லாதவர்கள், மார்க்கத்தின் மீது பற்றில்லாதவர்கள், கிறிஸ்தவத்தில் பல பிரிவுகள் உண்டு என்பவைகளாய் இருக்கின்றன. நம்முடைய இசைவின்மை காரணமாக, அவர்கள் நமக்கு எதிராக பயன்படுத்தும் வசை மொழிகள் தசை அடிகளாகவே அமைகின்றன. நம் சமாதான பிரபுவாகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்படுவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பாக கூட இந்த ஒற்றுமைக்காக ஜெபித்திருக்கிறார் என்றால் அது எந்த அளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நினைத்துப் பாருங்கள். ''நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் விசுவாசிக்கிற வர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன் என்னை அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்றார். அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன் ''(யோவான் 17:21). இவ் வசனப் பகுதியில் இந்த கடைசிப் பகுதி மிக முக்கியமானது. அதாவது, நாங்களும் கிறிஸ்துவை பின்பற்றுகிறோம் என்று சொல்லிக் கொள்ளும் கிறிஸ்தவர்களிடையே காணப்படும் ஒற்றுமையின்மை உலகத்தின் மக்கள் கிறிஸ்துவை விசுவாசியாமல் இருப்பதற்கு காரணமாக அமைவது நம் இதயத்துடிப்பை சில நொடிகள் நிறுத்தி விடுகிறது.

இன்றைய நாட்களில் முன்பெப்போதுமில்லாத அளவுக்கு இளைய தலைறையினரிடம் பிரிவினை தலைவிரித்தாடுவதால் அவர்களிடையே ஒற்றுமைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. கர்த்தருடைய சபையானது கர்த்தருடைய மரணத்திற்குப் பிறகு ஏறக்குறைய ஐம்பதாவது நாளில் எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டது. சில காலத்திற்கு இந்த

ஒற்றுமை தான் கர்த்தருடைய சபையை மற்றவர்களுக்கு அடையாளப்படுத்தியது. ஆதிக்கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும். அப்பம்பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய் தரித்திருந்தார்கள் [அப்போஸ்தலர்2:42]. இங்கே நாம் கவனிக்க வேண்டிய காரியம் என்னவென்றால், அந்நாட்களில் அத்தனை திரளானவிசுவாசிகளிடையே பிரிவினை இல்லாமல் ஒற்றுமை உணர்வு இருந்ததென்றால் இந்நாட்களில் சொற்ப எண்ணிக் கையில் இருக்கும் நாம் எந்த அளவு ஒற்றுமையை வெளிப்படுத்த வேண்டும்? சண்டைகளும் சச்சரவுகளும் நிறைந்த இவ்வுலகில் கிறிஸ்தவம் ஒற்றுமையின் மார்க்கம் என்று ஓங்கி ஒலிக்கச் செய்யும் பொறுப்பு நமக்கு தரப்பட்டுள்ளது. அதைத் துறக்கவோ, மறுக்கவோ நமக்கு உரிமை இல்லை.

II. **பிரிவினை ஏன் கூடாது?**

நம் பரிசுத்த தேவனுக்கு பிரிவினை என்பது பிரியமில்லாத ஒன்றாய் இருக்கிறபடியால் நாம் அதை எவ்வித பரிவுமின்றி எதிர்க்க வேண்டும். முதல் நூற்றாண்டு சபைப் பிரிவினை இன்றி ஒற்றுமையாக இருந்தபடியால் தான் அபார வளர்ச்சி அடைந்து அன்றைய உலகில் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. பிரிவினை தேவன் அருவருக்கும் ஏழு காரியங்களில் ஒன்றாய் இருக்கிறபடியால் அதை நம்மை விட்டு அறவே ஒழித்து விட வேண்டும் [நீதிமொழிகள் 6:19]. பவுல் ரோமாபுரியிலிருந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது நீங்கள் கற்றுக் கொண்ட உதேசத்திற்கு விரோதமாய் பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து அவர்களை விட்டு விலக வேண்டுமென்று புத்தி சொல்கிறார் [ரோமர்16:17]. அதைப்போல் கொரிந்து சபையில் பிரிவினை சம்மந்தமாக நடந்தேறிய கொடுமைகளை கண்டு கொதித்தெழுந்த பவுல் நீங்கள் எல்லாரும் ஒரே காரியத்தை பேசவும் பிரிவினைகளில்லாமல் ஏக மனதும், ஏக யோசனையும் உள்ளவர்களாய் சீர் பொருந்தி இருங்கள் என்று மன்றாடுகிறார் [1 கொரிந்தியர் 1:10]. பிரியமானவர்களே, கிறிஸ்தவத்தின் வளர்ச்சிக்கு பெரும் தடையாக இருக்கும் பிரிவினையைக் களைந்து, இருள் சூழ்ந்த உலகில் ஒற்றுமை எனும் ஒளியை வீசச் செய்து ஒரு கூட்டத்தாரை ஒன்றான மெய் தேவனிடத்திற்கு கொண்டு வருவோம். அதற்கு தேவன் தாமே உதவிச் செய்வாராக! ஆமென்.

✝

# புதிய நாமம்

K.M. பிலிப் – பவானி

இப்புதிய ஆண்டை கிருபையாய் நமக்கு அளித்த பிதாவாகிய தேவனுக்கு சதா காலமும் துதி, கனம், மகிமை உண்டாவதாக. சர்வ வல்ல தேவன் நம் வாழ்க்கையில் புதிய புதிய காரியங்களை செய்து கொண்டேதான் இருக்கிறார் (ஏசா.43:19). இதை நாம் ஒவ்வொரு நாளும் விடியற் காலையில் கண் விழிக்கும்போதே உணரமுடியும். நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே; அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள் (புலம்பல் 3:22,23) என்பதே மிகப்பெரிய உண்மையாகும். இதை நாம் முழுமையாய் புரிந்து கொண்டால் நாம் எப்பொழுதும் தேவனுக்கு நன்றியுள்ள இருதயத்தோடு துதி, கனம், மகிமை செலுத்த முடியும். ஆண்டு முழுவதுமே புதிய புதிய கிருபைகளைப் பெற்று செழிப்பாய், சமாதானமாய் சந்தோஷமாய் வாழ முடியும்.

தேவன் நம் வாழ்க்கையில் எல்லாவற்றையும் புதிதாக்கவே விரும்புகிறார். அந்த புதிய காரியந்தான், முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை, இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள் என்று பேதுரு மூலம் நம் உயர்ந்த நிலையை தேவன் வெளிப்படுத்துகிறார் (1பேதுரு 2:10,9). மேலும், சகல கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜனங்களிலும், ஜாதிகளிலுமிருந்து தேவனுக்கென்று கிறிஸ்துவின் இரத்தத்தினாலே நம்மை மீட்டுக்கொண்டார்'' (வெளி.5:9). என்பதை நினைத்துப் பார்த்தாலே நாம் எவ்வளவு விசேஷமானவர்கள் என்பதை உணரமுடியும். நாம் அவர் ஜனமாயிருப்பதால், கர்த்தர் தமது ஜனத்திற்கு பெலன் கொடுப்பார்; சமாதானம் அருளி அவர்களை ஆசீர்வதிப்பார் (சங்.29:11 ). அவருடைய ஜனமாகிய நம்மிடம் அவர், ''இவர்கள் என் ஜனம்; இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன். இவர்கள் என் துதியைச் சொல்லி வருவார்கள், என்று எதிர்பார்க்கிறார் (ஏசா.43:21)– ஆம் நாம் பிதாவாகிய தேவனை ஆவியோடும் உண்மையோடும் ஆராதித்து, துதித்து தேவனை மகிமைப்படுத்தி, கனப்படுத்தும் பொழுது, நான் நானே உன் மீறுதல்களை என்மீறுதல்களை என் நிமித்தமாகவே குலைத்துப் போடுவேன்; உன் பாவங்களை நினையாம லுமிருப்பேன். நீ என் பார்வைக்கு அருமையானபடியினால் கனம் பெற்றாய்; நானும் உன்னை சிநேகித்தேன் (ஏசா.43:25,4) என்று தேவன் வாக்குக் கொடுக்கிறார். அந்த சிநேகத்தின் (அன்பின்) வெளிப்

பாடாகத்தான், தன் ஒரே பேரான குமாரனை தியாக பலியாக செலுத்தி நம்மை மீட்டுக்கொண்டார். பயப்படாதே உன்னை மீட்டுக் கொண்டேன். உன்னைப் பேர் சொல்லி அழைத்தேன் நீ என்னுடையவன்'' என்று ஏசா 43:1 ). தேவன் நம்மீது உரிமை கொண்டாடுகிறார். அந்த உரிமையை நிலைநாட்ட, நம்மைக் கனப்படுத்த ஒரு புதிய நாமத்தை நமக்கு சூட்டி ( ஏசா.62:2 ) அழைக்கிறார். கிறிஸ்துவின் மூலம் பிதாவாகிய தேவனை ஏற்றுக்கொண்ட நமக்கு கிறிஸ்தவர்கள் என்ற புதிய நாமத்தை சூட்டி அழகு பார்க்கிறார் (அப்.11:25, 1பேதுரு 26:28, 4:16). தன் ஒரே பேரான குமாரனின் நாமத்தையே நமக்குத் தரித்து நம்மை கனப்படுத்தியுள்ளார்.

பிரியமானவர்களே! இப்புதிய நாமம் நம்மை கிறிஸ்துவோடு இணைத்து நம்மை அடையாளப்படுத்துகிறது. கிறிஸ்து+ அவர்கள்= கிறிஸ்தவர்கள்; கிறிஸ்து+ அவன்= கிறிஸ்தவன்; கிறிஸ்து+அவள்= கிறிஸ்தவள் - இதில் நான் பாடம் எடுக்கவில்லை; நம்மைக் குறித்த பாடம் எடுக்கிறேன். இப்புதிய நாமம் நாம் கிறிஸ்துவோடு இணைந்து வாழும் வாழ்க்கையை கொடுத்திருக்கிறது. இப்புதிய உறவு நம்மை புது சிருஷ்டியாய் உருவாக்கியுள்ளது ( 2 கொரி.5:17 ). இப்பொழுது நம் பாடத்தைப் பாருங்கள்; பழையவைகள் ஒழிந்து போயிற்றா? எல்லாம் புதிதாயிற்றா? ஆம், நம்முடைய பழைய முரட்டு சுபாவம், முன்கோபம், எரிச்சல், பகைமை, சண்டைகள், பெருமை, பொய், துர் இச்சை ஆகிய பழைய தோற்றம் அகன்று போய்விட வேண்டும். புது சிருஷ்டியான, புதிய நாமம் தரிக்கப்பட்ட நம் வாழ்க்கையில் கிறிஸ்துவின் சாயலான அன்பு, சந்தோசம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் பிரதிபலிக்க வேண்டும். அருமையானவர்களே! இப்பொழுது நம் சிந்தையில், சொல்லில், செயலில் காணப்படும் புதிய மாற்றத்தைக் கண்டு, இவர்கள் கிறிஸ்தவர்கள் என்றும், நாமும் இந்தப் புதிய நாமத்தைத் தரித்துக்கொள்ள வேண்டும் என்று காண்பவர்கள் களிகூற வேண்டும். ஆம், நம் வாழ்க்கை உலகத்திற்கு வெளிச்சமாய் இருக்கவேண்டும். நமக்கு சூட்டப்பட்ட புதிய நாமம் மகிமைப்பட வேண்டும்.

அன்பானவர்களே! புதிய நாமம் தரிக்கப்பட்ட நம் வாழ்க்கையில் ஒழிந்துபோன பழையன மீண்டும் தலைதூக்க இடம் கொடுக்கலாமா? நம்மைத் தீட்டுப்படுத்த அனுமதிக்கலாமா? இங்கு நாம் புரிந்துகொள்ள வேண்டியது, **இருதயத்திற்குள்ளிருந்து புறப்படுகிற பொல்லாங்**

**கானவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்''** ( மாற்கு 7:20–23 ). **ஆகவே, ''தேவனே! சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும் என்று எப்பொழுதும் ஜெபிப்போம். ஒழிந்து போன பாவங்கள் மீண்டும் இருதயத்திற்குள் புகாதபடி நான் உமக்கு விரோதமாய் பாவம் செய்யாதபடிக்கு உமது வாக்கை என் இருதயத்தில் வைத்து வைத்தேன்** ( சங்.119:11 ) என்ற தாவீதின் அனுபவத்தை நமதாக்குவோம். உள்ளான மனுஷன் நாளுக்கு நாள் புதிதாக்கப்படவும் ( 2 கொரி.4:16 ) நாம் பரிசுத்தத்தில் வளரும்படி புதிதாய்ப் பிறந்த குழந்தையைப்போல களங்கமில்லாத ஞானப் பாலின்மேல் வாஞ்சையாயிருப்போம் ( 1பேதுரு 2:3 ). நமது உறவு கிறிஸ்துவோடும், அவருடைய அவருடைய உபதேசத்தோடும் மட்டுமே இருக்க வேண்டும். கிறிஸ்துவுக்கும், பேலியாளுக்கும், உறவு ( சம்பந்தம் ) இல்லை என்பதிலும், இருளுக்கும், ஒளிக்கும் ஐக்கியம் இல்லை என்பதிலும் உறுதியாயிருப்போம் ( 2 கொரி.6:15 ).

அருமையானவர்களே! நாம் ஒரு புதிய ஆடையைத் தரித்துக்கொள்ளும் போது, நமக்கே நம் தோற்றம் மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. இந்த உணர்வு புதிய மகிமையான நாமம் தரிக்கப்பட்ட நமக்குள்ளும் இருக்க வேண்டும். அப்படியே வெளியில் செல்வோமேயானால் மற்றவர்கள் பார்வையிலும் நம்மைக் குறித்து சந்தோஷம், மதிப்பு உண்டாகிறது அல்லவா? அதைப்போலவே கிறிஸ்தவன்(ள்) என்ற புதிய நாமம், அதற்கேற்ற நம் வாழ்க்கை கிறிஸ்துவுக்கு பெருமை சேர்க்கும். புதிய நாமத்திற்கேற்ற நம் அணுகுமுறை அநேகரை இப்புதிய நாமத்தை தரித்துக் கொள்ளச் செய்யும்; தேவ நாமம் மகிமைப்படும். கிறிஸ்து இப்பூமியில் வாழ்ந்தபோது **இவரில் பிரியமாய் இருக்கிறேன்** என்று பிதாவாகிய தேவன் தன் அன்பை வெளிப்படுத்தினார். கிறிஸ்துவின் நாமத்தை தரித்துக்கொண்ட நம்மையும், **பிரியமானவனே!..நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிரு** என்று பிதா நம்மை வாழ்த்தக் கூடிய பிரியமான வாழ்க்கை வாழ்வோம். இப்புதிய ஆண்டில் இப்புதிய நாமத்தை மற்றவர்களும் தரித்துக்கொண்டு தேவனோடும், குமாரனோடும், பரிசுத்த ஆவியானவரோடும், சபையோடும் உறவு கொள்ளச் செய்வோம். இப்புதிய நாமம் இயேசுவின் வருகையில் நம்மை பரலோகத்தில் சேர்க்கும் ( வெளி.14:1 ) என்ற விசுவாசத்தோடு மகிழ்ச்சியாய் ஆயத்தமாயிருப்போம் தேவ நாமம் மகிமைப்படுவதாக. ஆமென்!!

✝

## புத்தாண்டில் சில புத்திமதிகள்

Bro. பாண்டியன்

நம் எஜமானர் இயேசுவின் நாமத்தில் அனைவருக்கும் புதிய ஆண்டின் முதல் மாத வாழ்த்துக்கள். பொதுவாக உலகத்தார் இந்தப் புதிய ஆண்டு எப்படியிருக்குமோ, என்ன பிரச்சனைகள் வருமோ? நாம் எப்படி கடந்து செல்லப் போகிறோமோ? என்று பயப்படுவது உண்டு. ஆனால், ஒன்று ஞாபகத்தில் வையுங்கள்.... நாம் வணங்கும் தேவன் நமக்கு முன்னே சென்று கோணலான வைகளை செவ்வையாக்கும் தேவனவர் ( ஏசா 45:2 ). ஆகவே, நமக்கு எதிர்வரும் காரியங்களைக் குறித்து நாம் கவலைப்படத் தேவையில்லை. அதற்கு பதில் நாம் **தேவனுக்கு பயந்து நடக்கும்போது** அவர் நமக்கு ஞானத்தைத் தந்து புதிய ஆண்டை எதிர்கொள்ளும் தைரியத்தையும் நடக்க வேண்டிய வழியில் நடக்க ஆலோசனைகளையும் நிச்சயம் தருவார். கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் என நாம் அனைவரும் அறிவோம். **தேவனுக்கு பயப்படுவது** என்றால் என்ன என்று ஒரு சில காரியங்களை பார்ப்போம்.

முதலாவது சங்.111:10ன் படி, கர்த்தருக்குப் பயப்படுகிறவன் அவருடைய கற்பனைகளின் படி செய்வான் என பார்க்கிறோம். நம் தேவன் நமக்கு பிரயோஜனமாய் இருக்கிறதை உனக்கு போதித்து நீ நடக்க வேண்டிய வழியிலே உன்னை நடத்துகிற தேவன் என ஏசா48:17ல் காண்கிறோம். கைக்கொள்வதைப் பற்றி நம் ஆண்டவர் குறிப்பிடும்போது, என் வார்த்தைகளைக் கேட்டும், செய்யாதிருக்கிறவன் புத்தியில்லாத மனுஷனாய் இருக்கிறான் என்கிறார். பெற்றவர்கள் தங்கள் பிள்ளைகள் புத்திமான்களாய் இருக்கவே விரும்புவார்கள். அதைப்போலவே நம் பிதாவும் நாம் அவருக்குப் பயந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு புத்தியுள்ளவர்களாய் இருக்கவே எதிர்பார்க்கிறார்.

ஏனெனில், மூடர் கர்த்தருக்குப் பயப்படாமல் அவருடைய **ஞானத்தையும், போதகத்தையும்** அசட்டை செய்கிறார்கள் என்று நீதி.1:7ல் வாசிக்கின்றோம். சில பேருக்கு புத்திமதி சொன்னால் பிடிக்காது. விசேஷமாக வாலிபப் பிள்ளைகள் நாம் ஆலோசனை சொல்லும் போது அற்பமாக நினைக்கின்றனர். ஆனால், அது முட்டாள்தனம் என்கிறது வேதம். யாரும் பிறப்பிலேயே ஞானிகள் கிடையாது சிறுவயதில் பெற்றோர், படிப்பு, பின்பு சிநேகிதர், துரோகங்கள், உலக அனுபவங்கள் மூலமாக நாம் ஓரளவு இந்த உலகத்தைப் புரிந்து கொள்கிறோம். ஆனால், எல்லார் மேலும் விழுந்த கடமையாக தேவனுக்கு பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள்வதே சிறந்த வழியாக இருக்கிறது. அதினால்,

தேவனுடைய பார்வையிலும், மனுஷருடைய பார்வையிலும், தயையும், நற்புத்தியும் பெறுவாய் ( நீதி. 3:4 ) என்கிறது வேதம்.

அடுத்து, **தேவனைப் பற்றிய அறிவு** தான் தேவனுக்கு பயப்படுவதும், ஞானத்தின் ஆரம்பமாகவும் உள்ளது (நீதி.9:10 ). இவ்வுலகம் உயர்ந்த படிப்பையும், மிகுந்த செல்வத்தையும், புகழையும் உடையவர்களை அறிவாளிகள் எனப் போற்றுகிறது. ஆனால், பரிசுத்தரின் அறிவே அறிவு என்கிறது வேதம். அதற்கு தேவனுடைய வார்த்தைகளை வெள்ளியைப்போல நாடி, புதையல்களைத் தேடுகிறது போல் தேடுவோமானால் அப்பொழுது கர்த்தருக்குப் பயப்படுதல் இன்னதென்று உணர்ந்து, தேவனை அறியும் அறிவை கண்டடைவாய் என ( நீதி. 2:5ல் ) காண்கிறோம். **பூமியிலே கிருபையையும், நியாயத்தையையும், நீதியையும் செய்கிற தேவன் அவரே** என்று ஒருவன் அறிந்து கொள்வதே அவனுக்கு பெருமை ஆகும் ( எரே 9:24 ) அந்த சத்தியமுள்ளவரை அறிந்து கொள்வதற்கு தேவனுடைய குமாரன் வந்து நமக்குப் புத்தியைத் தந்திருக்கிறார். மேலும், பலி, காணிக்கையை விட தேவனை அறிகிற அறிவு முக்கியம் என்கிறார் ஓசியா தீர்க்கன். ஒன்றான மெய் தேவனையும், இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன் என்கிறார் இயேசு. பரிசுத்தரைப் பற்றிய அறிவில்லாததால் தான் மனுஷர் மது, மாது, சூது போன்ற தவறான காரியங்களில் சிக்கி சீரழிவதை நாம் அன்றாடம் கண்கூடாகக் காண்கிறோம்.

கர்த்தருக்குப் பயப்படுதல் உனக்குத் **தாழ்மையைக் கற்றுத்தந்து** இவ்வுலகில் உன்னை மேன்மையாக வைக்கும் (நீதி.15:33 ). இவ்வுலக மக்களின் கண்களுக்கு முன்பாகத் தெய்வ பயமில்லை. அவர்கள் மத்தியிலிருந்து நம்மை தேவன் பிரித்தெடுத் திருக்கிறார். நாம் தெய்வ பயத்தோடே ஒருவருக் கொருவர் கீழ்படிந்திருக்க அப். உபதேசம் போதிக்கின்றது. அதனால் தான் சபைகளில் ஒற்றுமையும், ஐக்கியமும் நிலைத்திருக்க முடியும். தன்னைத் தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்ற நமதாண்டவர் அப்படியாக வாழ்ந்து காண்பித்து, **நான் சாந்தமும் மனத்** தாழ்மையுமாய் இருக்கிறேன். என்னிடத்தில் கற்றுக் கொள்ளு ங்கள் என்றார். சபையாராகிய நாம் மனந்திரும்பி, நம்மைத் தாழ்த்தி அவரைத் தேடி ஜெபிக்கும் போது தான் நம் தேசமே நலமாயிருக்கும் ( 2 நாள.7:14 ). அவ்வாறு தேவ பிள்ளைகள் தேவனுக்குப் பயந்து நடக்கும்போது தேவன் தரும் சில ஆசீர்வாதங்களை கவனிப்போம்.

ஏசா.43:19ல் இதோ புதிய காரியங்களை செய்கிறேன் என்றும் என் ஜனங்கள் என் துதியை சொல்லி வருவார்கள் என்றும் வாக்களிக்கிறார். தேவனுக்காக பேசும் வாய்ப்பை நாம் தவறவிடாமல் பயன்படுத்திக் கொண்டு தேவனை மகிமைப் படுத்துவோம்.

தாலந்துகளை புதைத்து வைக்காமல் இந்த வருடத்தில் கனி கொடுக்கிற மரமாக இருங்கள். அடுத்ததாக, பெரிய காரியங்களை செய்வேன் என்கிறார் ( சங்.126:1-3) நம் சிறையிருப்பை திருப்பி நாம் மகிழ்ச்சி யாயிருக்க தேவன் விரும்புகிறார். மனுஷர் நமக்கு விரோதமாக எழும்பும்போது நம் பக்கத்திலிருப்பவர் நம் தேவனே என்பதை மறவாதீர்கள். அவர் வருஷத்தை நன்மையாய் முடி சூட்டுகிற தேவன் நமக்காக அரிதான காரியங்களையும் செய்கிற தேவன் (2 ராஜா 2:9-11) அதற்காக நாம் செய்ய வேண்டியது தேவனுக்கு பயந்து கற்பனைகளைக் கைக்கொள்வது மற்றும் விசுவாசமுள்ள ஜெபம் அவசியமாகும் - யாபேஸ் கேட்டதைப் பெற்றான் (1 நாளா.4:10) நாம் வேண்டிக்கொள்வதற்கும் அதிகமாக நமக்கு மிகவும் அதிகமாக செய்யக்கூடிய தேவனுக்கு கிறிஸ்து இயேசுவின் மூலமாய் சதா காலமும் மகிமை உண்டாவதாக. ஆமென்!! ✝

---

34ம் பக்க தொடர்ச்சி...

இதன்படி இயேசுகிறிஸ்துவானவர் ரோமருடைய ஆட்சி காலத்தில் பிறந்தார், லூக். 2: 1 - 7. ரோமருடைய ஆட்சிகாலத்திலே ஊழியத்திற்கு வந்தார், லூக். 3 : 1 - 2, 21 - 22; 4 : 14 - 15. அப்பொழுது இயேசுவானவர் தம் சபையாகிய ராஜ்யத்தை கட்டப் போவதாக முன் கூறினார். "மேலும், நான்

உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக்கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்,'' மத். 16: 16 -19. 3

இப்படி நம்முடைய பிதாவாகிய தேவன் சகலத்தையும் திட்டமிட்டு கிறிஸ்துவின் மூலம் சபையாகிய ராஜ்யத்தை ஸ்தாபித்து, அதை உலகம் முழுவதும் தம் ஊழியர்களைக்கொண்டு விஸ்தரிப்பு செய்தார். அப். 2 : 1 - 47. இந்த நிகழ்ச்சிகள் ரோமருடைய ஆட்சிகாலத்தில் நடைபெற்றது. இந்த கிறிஸ்துவின் சபைக்கு கிறிஸ்துவே தலைவராய் இருக்கிறார். அவருடைய புதிய ஏற்பாட்டு சத்தியமே அவருடைய சபையில் போதிக்கப்படவேண்டும். இவை அனைத்தும் கி. பி. முதலாம் நூற்றாண்டில் நடந்தது.

ஆனால், அதன் பிறகு சுமார் நான்காம் நூற்றாண்டு தொடங்கி மனிதர்கள் தங்கள் சொந்த இஷ்டமாக சபைகளை வெவ்வேறு இடங்களில் ஆரம்பித்து, அதில் தங்கள் சொந்த சட்டங்களையும் கோட்பாடுகளையும் ஏற்படுத்திக்கொண்டு, மக்களை தங்கள் பக்கம் இழுத்துக்கொண்டிடு விசாலமான, கேட்டுக்குப்போகும் பாதையில் அவர்களை நடத்துகிறார்கள். இதைக்குறித்து அடுத்த மாதம் கவனிக்கலாம். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

# கிறிஸ்து என்னும் மார்க்கம் பாடங்கள்

## மெய்யான சபை

சகோ. ஜே. ஆபகூக் ஜேம்ஸ் ராஜகுமார், சென்னை.

**மெ**ய்யான சபையைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுலானவர் வெளிப்படுத்தும்போது: தேவன் நம்முடைய **கர்த்தராகிய** கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே, உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின்மூலமாய் இப்பொழுது தெரியவரும்பொருட்டாக, இயேசுகிறிஸ்துவைக் கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு, இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்கிறார். எபே. 3: 9 – 11.

மேலும், அப்போஸ்தலரான பேதுரு பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு எழுதும்போது, மெய்யான சபையாகிய ராஜ்யம் உலக தோற்றத்திற்கு முன்பே தேவனால் கிறிஸ்துவுக்குள் திட்டமிடப்பட்டது என்கிறார்: **அவர் உலகத்தோற்றத்திற்கு முன்னே குறிக்கப் பட்டவராயிருந்து, தமது மூலமாய் தேவன்மேல் விசுவாச மாயிருக்கிற உங்களுக்காக இந்தக் கடைசிக்காலங்களில் வெளிப்பட்டார்.** 1பேது. 1 : 20.

ஏதேன் தோட்டத்தில் ஆதாம் ஏவாள் சாத்தானுடைய வஞ்சகத்தினால் தேவனுடைய கட்டளையை மீறி, பாவம் செய்தபோதே, ஸ்திரீயின் வித்தாக கிறிஸ்துவானவர் பிறந்து, மனிதகுலத்திற்கு இரட்சிப்பைக் கொண்டுவருவார் என்று தேவன் சர்ப்பத்திடம் கூறினார்: அப்பொழுது தேவனாகிய **கர்த்தர்** சர்ப்பத்தைப் பார்த்து: நீ இதைச் செய்தபடியால் சகல நாட்டுமிருகங்களிலும் சகல காட்டுமிருகங்களிலும் சபிக்கப்பட்டிருப்பாய், நீ உன் வயிற்றினால் நகர்ந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய்; உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்,'' ஆதி. 3:14 – 15.

தேவகுமாரன் மனிதர்களை இரட்சிக்கும்படி ஸ்திரீயின் வித்தாக பிறந்து வருவார் என்று கலாத்தியர் 4 : 5 கூறுகிறது: காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்தில் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார். அவரால் இரட்சிக்கப்பட்டவர்கள் மெய்யான சபையாய் இருப்பார்கள்.

வரப்போகிற இரட்சகர் கிறிஸ்து, ஆபிரகாமின் சந்ததியாய் இருப்பார்; அவருக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கபடும் என்றார்: நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில்

ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார். ஆதி.22:18.

இதை அப்போஸ்தலனாகிய பவுலும் கலாத்தியருக்கு எழுதும்போது உறுதிசெய்கிறார்: ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன; சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக்குறித்துச் சொல்லியிருக்கிறார், அந்தச் சந்ததி கிறிஸ்துவே,'' கலா. 3:16.

மெய்யான சபையாகிய ராஜ்யத்தை ஸ்தாபிக்கும் இரட்சகராகிய மேசியா யூதா கோத்திரத்தில் ராஜாவாகப் பிறந்து வருவார் என்று வேதம் கூறுகிறது: யூதா பாலசிங்கம், நீ இரை கவர்ந்துகொண்டு ஏறிப்போனாய்; என் மகனே, சிங்கம்போலும் கிழச்சிங்கம்போலும் மடங்கிப் படுத்தான்; அவனை எழுப்புகிறவன் யார்? சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதும் இல்லை, நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை; ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள். ஆதி. 49 : 9 –10.

மெய்யான சபையாகிய ராஜ்யத்தை ஸ்தாபிக்கப் போகிறவர் ஈசாயின் மகனான தாவீதின் வம்சாவழியாக பிறந்து வருவார் என்று பரிசுத்த ஆவியானவர் கூறுகிறார்: ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும். ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் **கர்த்தருக்குப்** பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய **கர்த்தருடைய** ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார் என்கிறார், ஏசா. 11: 1 – 2.

அவர் தாவீதின் கர்ப்பபிறப்பாகப் பிறந்து சிங்காசனத்தில் அமர்ந்து, தேவனுக்கென்று மெய்யான சபையாகிய ராஜ்யத்தை கட்டுவார்; அதுவே தேவனுடைய ஆவிக்குரிய தேவாலயமாயிருக்கும் என்றார்: "உன் நாட்கள் நிறைவேறி, நீ உன் பிதாக்களோடே நித்திரை பண்ணும் போது, நான் உனக்குப்பின்பு உன் கர்ப்பப்பிறப்பாகிய உன் சந்ததியை எழும்பப்பண்ணி, அவன் ராஜ்யத்தை நிலைப்படுத்துவேன். அவன் என் நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டுவான்; அவன் ராஜ்ய பாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக் கப்பண்ணுவேன்'' என்கிறார். 2சாமு. 7 : 12 – 13.

இது தேவதூதனால் சொல்லப்பட்டதாக லூக்காவும் பதிவுசெய்கிறார்: "தேவதூதன் அவளை நோக்கி: மரியாளே, பயப்படாதே; நீ தேவனிடத்தில் கிருபைபெற்றாய். இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு **இயேசு** என்று பேரிடுவாயாக. அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான்.'' லூக். 1 : 30 – 33.

மெய்யான சபையை ஸ்தாபிக்கும் மேசியா என்னும் கிறிஸ்து ஒரு

கன்னிகையின் மூலம் பிறப்பார் என்று பரிசுத்த ஆவியானவர் கூறுகிறார்: **ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள் என்றார்இ ஏசா. 7 : 14.**

இதை தேவதூதன் யோசேப்பிடம் சொன்னதாக மத்தேயுவும் உறுதிசெய்கிறார்: "அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான். தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தரால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது. அவன்: இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம் என்றான், மத். 1:21–23.


மெய்யான சபையை ஸ்தாபிக்கும் கிறிஸ்து பெத்லேகேமில் பிறந்து வருவார் என்று பரிசுத்த ஆவியானவர் மீகா தீர்க்கதரிசியைக் கொண்டு உரைக்கிறார்: "எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறிய தாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது.'' மீகா 5 : 2.


மெய்யான சபை எருசலேமில் சுவிசேஷம் அறிவிக்கப்படுவதால் ஸ்தாபிக்கப்படும் என்று ஏசாயா கூறுகிறார்: "கடைசிநாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் **கர்த்தரின்** பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார்; நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில், சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து **கர்த்தரின்** வசனமும் வெளிப்படும்'' என்கிறார், ஏசா. 2 : 2 – 3.

மெய்யான சபையாகிய ராஜ்யம் ரோமசாம்ராஜ்யத்தின் காலத்தில் ஸ்தாபிக்கப்படும் என்று தேவன் தானியேலைக் கொண்டு முன்கூறினார்: "அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டுவந்து, இரும்பையும், வெண்கலத்தையும், களிமண்ணையும், வெள்ளியையும், பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்.'' தானி. 2 : 44.

[இதன் தொடர்ச்சி பக்கம் 31ல் உள்ளது]


12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும்.
தேவைக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

















# World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Tuesday 6:30 - 7:00 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7:30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026



**"Registered" with RNI No: TNTAM/2006/20446**
Postal regn. No. Erode/26/2021 - 2023
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023**
Published on 17/18 th of Every Month
Posted at Erode HPO on 20/21 of Every Month.

**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்


# எங்களது இதர வெளியீடுகள்


**தபால் செலவிற்கு**
**பணம் அனுப்பி**
**இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**




















## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

**To:**

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638–701.
தமிழ்நாடு , இந்தியா.

## திருமறை தியானம்

**நம்பிக்கை** தொலைக்காட்சியில்

செவ்வாய் காலை 6:30 – 7:00 மணி
வெள்ளி காலை 7:30 – 8:00 மணி

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.